بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**Friday Sermon/ வெள்ளிக்கிழமை குத்து.்.பா 31 March 2017**

**(02 Rajab 1438 Hijira)**

# THE HUMAN HEART / மனித இதயம்



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

உலக மக்களுக்கு சலாம் தெரிவித்த பிறகு தஷஹ்ஹுதும் தஅவசும் சூரா.்.அல் பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு உரையாற்றினார்.

மனிதனின் அனைத்து வகையான உணர்ச்சிகளுடையவும் இருப்பிடம் இதயம் ஆகின்றது. **தீய உணர்ச்சிகளும் சிந்தனைகளும் குவிந்திருக்கும் ஒரு இதயத்தில் சாத்தான் குடியிருக்க விரும்புகின்றான். அத்தகையான இதயங்களில் சாத்தான் குடியிருக்கின்றான்.** மட்டுமின்றி நேர்பாதையிலிருந்து அல்லாஹ்வின் அடியார்களை தடம் மாற்றிக் கொள்வதற்கு இதயத்தின் கட்டுப்பாடை அவன் (சாத்தான்) கையாளுகின்றான். அத்தகைய இதயங்கள் அவநம்பிக்கைகளுடையவும், சந்தேகங்களுடையவும், குழப்பங்களுடையவும் இடமாகின்றது. திருக்குர் ஆனின் போதனைகளின் படி அத்தகைய இதயங்கள்

மீது முத்திரையிடப் பட்டிருக்கின்றது. அல்லாஹ் அவனது கித்தாப் வாயிலாக கூறுகின்றான்

**“வரம்பு மீறும் இத்தகையவர்களின் இதயங்கள் மீது இவ்வாறே நாம் முத்திரையிடுகின்றோம்”** (10 : 75)

**“நிராகரிப்போரின் இதயங்களில் நான் திகிலை உண்டாக்கி விடுவேன்”** (8 : 13)

மனித இதயத்தைக் குறித்து இவ்வகையான ஏராளம் உதாரணங்கள் திருக்குர்ஆனில் காணலாம். அதைப் போன்றே, தூய இதயத்தின் நல்லொழுக்க தன்மைகளைக் குறித்தும் ஏராளமான உதாரணங்கள் அல்லாஹ்வின் கித்தாபில் காணலாம். ஒரு தூய இதயம் , அன்பாலும் தன்னைபடைத்த இறைவனையும் மானிட குலத்தையும் குறித்த மாபெரும் ஞானத்தாலும் குவிந்திருக்கும். உதாரணமாக கூறிக்கொண்டால் திருக்குர் ஆனில் இவ்வாறு காணலாம்.

**“அல்லாஹ்வை நினைவு கூறுவதால் அவர்களுடைய இதயங்கள் அமைதி பெறுகின்றன”** (13 : 29)

அல்லாஹ் எல்லா முஸ்லீம்களிடமும் கூறுகின்றான். **“உங்கள் இதயங்களை அன்பினால் பிணைத்து அவனது அருளால் நீங்கள் சகோதரர்களாய் ஆகிவிட்டீர்கள்”** (3 : 104)

**“உங்கள் இதயங்கள் நிம்மதியடையவும் ஒரு நல்ல செய்தியாகவுமே (தவிர அல்லாஹ் அதைச் செய்யவில்லை)”** (3 : 127)

ஒருவரின் சிந்தனையும் அவரின் உடலளவிலான நிலையும் ஒன்றுக்கொன்று இணைந்திருக்கின்றது என்பது சந்தேகமின்றி விஞ்ஞான ஆராய்வுவாயிலாக உறுதிசெய்யப்பட்டதாகும். ஆரோக்கியம் வாய்ந்த ஒரு இதயம் அந்த மனதை ஆரோக்கியம் வாய்ந்ததாக பாதுகாக்கின்றது. அதில் சந்தேகமில்லை. அதை போன்றே மறித்தும். ஒருவரின் (தனிப்பட்ட) நோக்கம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பது அவரின் சிந்தனையாகும். மற்றொரு வார்த்தையால் அதை கூறிக்கொண்டால், நாம் எவ்வாறு சிந்திக்கின்றோமோ அதுவேயாகும் நாம். கருணையுடையவனும் நம் இரட்சகனுமாகிய அல்லாஹ் அவனது நிகரற்ற கருணையின் வாயிலாக நம் சிந்தனைகளை கட்டுப்படுத்திக் கொள்வதற்கான ஆற்றல் நமக்கு வழங்கியிருக்கின்றான். அது வழியாக ஒரு நல்லொழுக்க தன்மையுடையவராக வாழ்ந்திடுவதற்கு! தீமையில் ஊன்றிய ஒருவரின் நோக்கம் எனும் விதை தீமை வாய்ந்ததாகவும் அதைப் போன்றே நன்மையில் ஊன்றிய ஒருவரின் நோக்கம் எனும் விதை நன்மை வாய்ந்ததாகவும் முளைத்துக் கொள்கின்றது. நான் முதலில் கூறியது போன்றே எல்லா வகைப்பட்ட நன்மைகளுடையவும் தீமைகளுடையவும் உற்பத்தி இடம் இதயமாகின்றது. ஆகவே தூய்மையான ஒரு இதயத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டியது மிக அவசியமானதாகும்.

நம் தினசரி வாழ்க்கையில் நிகழும் அனைத்து விதமான உணர்ச்சிகளுடையவும் அடிப்படை இதயம் என நாம் எண்ணுகின்றோம். ஆனால் முன்னேற்றத்தின் பாதையில் பயணம் மேற்க்கொள்ளும் விஞ்ஞானத்திற்கு இதைப்பற்றி சில விஷயங்கள் வெளிப்படுத்திக் கொள்வதற்குண்டு. நிச்சயமாகவும் விஞ்ஞான நோக்கத்தில் பார்த்தால், இதய நோய்களுக்கு பயன்படுத்துகின்ற பௌதீக மருந்து வகைகள், அசாதாரணமான நிலையில் அவ்வியாதியிலிருந்துள்ள மீட்சிக்கு போதுமானதாகயிருக்கின்றது. உணர்ச்சியற்ற ஒரு குழல்(Pump) என்ற நிலையில் அதற்கு சிகிட்சையளிப்பதற்கு, செயற்கை வாயிலாக இதயத்தின் துடிப்பை இயங்கவைப்பதற்கான துணைப்பொருளை (Pace makers) மருத்துவர்களுக்கு உருவாக்கிட முடிந்திருக்கின்றது. மிக உன்னதமான (High-Tech) மருந்து வகைகளை பயன்படுத்தி அதை (இதயத்தின் துடிப்பை) அவர்கள் இயங்க வைத்துக் கொள்கின்றனர். ஆனால் விஞ்ஞானத்தின் வாயிலாக செயற்கை இதயத்தை அவர்கள் படைத்துக் கொள்கின்றனர் என்பது உண்மையாகயிருந்தாலும் (அல்லாஹ்வின் அனுமதிப்படியும் அவன் வழங்கிய அறிவின் உதவிப்படியும்) உடலினுடையவும் மனதினுடையவும் இந்த வேறுபடுதல் (மரணம்) என்பது திட்டவட்டமாக இருக்கின்றது. ஆன்மீகமாகவும் உணர்ச்சிவசமாகவும் கூறிக்கொண்டால், உள்படையும் வெளிப்படையுமான நம் எண்ணங்களுடையவும் உணர்ச்சிகளுடையவும் கட்டுப்பாட்டின் உச்சி என்று இதயத்தை மிக அழகான முறையில் கூறிக்கொள்கின்றனர். இப்பகுதியை எப்பொழுதும் சுத்தமாகவும் களங்கமற்றதாகவும் தூய்மையாகவும் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது மிக அவசியமாகும். அதைப் போன்றே பௌதீகமான நோக்கத்தின் அடிப்படையில் கூறிக்கொண்டால், இதயம் நம் உடம்பின் முக்கியமான பகுதியாகின்றது. அதை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது நம் கடமையாகும். அதற்காக நாம் எவ்வளவு அதிகம் கவனம் வைத்துக் கொள்கின்றோமோ அவ்வளவு ஆரோக்கியத்துடன் நாம் வாழ்ந்திருப்போம்.

ஒரு உண்மையான முஸ்லீம் தம் இதயத்தை எல்லா நேரங்களிலும் பரிசோதித்துக் (ஆராய்ந்து) கொண்டிருப்பான். அதாவது ஏனையவர்களிடத்தில் இரக்கத்துடன் தானா தம் உணர்ச்சிகள் வெளிப்படுத்திக் கொள்வது? அவர்களிடத்தில் தமக்கு அன்பிருக்கின்றதா? தம் நோக்கங்கள்யாவும் நேர்மையானது தானா? என்று தம் இதயத்தை எல்லா வேளைகளிலும் பரிசோதித்துக் கொண்டிருக்க வேண்டும். உண்மையான அத்தகைய இதயம் எளிமையுடையவும், நேர்மையுடையவும், உண்மையுடையவும், நம்பிக்கையுடையவும், நட்பினுடையவும், தைரியத்தினுடையவும், இரக்கத்தினுடையவும், சிறந்த உதாரணமாக திகழும். இதயம் அனைத்து வகைப்பட்ட உணர்ச்சிகளுடையவும் இருப்பிடம் ஆகின்றது. அது, ஆன்மாவினுடையவும் மனதினுடையவும் தைரியத்தினுடையவும் போன்று

பல்வகையான விஷயங்களுடையவும் இருப்பிடமாகின்றது. ஒருவர், ஒரு நபரிடம் நன்றியினை தெரிவித்துக் கொள்ளும் பொழுது அந்நன்றியை அவர் தம் இதயத்திற்குள்ளிலிருந்தே வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒருவர் வேதனைகளில் உட்பட்டுக் கொள்ளும் பொழுது உள்ள பூர்வம் அதில் நாம் பங்காளியாக வேண்டும். ஒரு நபர் தைரிய சாலியாக இருந்தால் அந்நபரை நாம் "சிங்க இதயத்தைக் கொண்டவன்" என கூறுகின்றோம். எதிர்பாராத ஒரு செய்தி அல்லது ஒரு நிகழ்வு நம் இதயத்திற்கு அதிர்ச்சியை ஏற்ப்படுத்திக் கொள்ளலாம். ஒரு பொருளின் உண்மையை பகுத்தறியும் பொழுது! ஒரு நபரை நீங்கள் மிக அதிகமான அளவில் விரும்பிக் கொள்கின்றீர்கள் என்றால் நீங்கள் கூறிக்கொள்வீர்கள் அவர் என் இதயத்தில் இருக்கின்றார் என. அதைப்போன்றே இதயத்தின் பரிணாமத்தைக் குறித்தும் கூறாமலிருப்பது சரியல்ல. இதயம் என்பது மனிதனில் குடிக் கொள்ளும் அபூர்வமான மனித சிறப்புகளில் பட்ட ஒன்றாகும். அது, வேறு எந்த படைப்பினங்களுக்கும் வழங்கப்படாத ஒன்றாகும். சில ஆள்களின் இதயங்களுக்கு சில நேரங்களில் மாற்றங்கள் ஏற்ப்படலாம் வேறு சிலரின் இதயங்களை பாறைகள் கொண்டு உருவாக்கியதாகலாம். ஈசாப்னுமர்யம்(அலை)(மரியாவின் மகன் -இயேசு) அவர்கள் கூறியதாக ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கின்றது.

**"உன் கடவுளாகிய ஆண்டவருக்கு முழு உள்ளத்தோடும் முழு மனதோடும் முழு ஆத்மாவோடும் அன்பு செய்வாயாக"(மாத்யு 22-37)**

இஸ்லாமின் தூய தூதர்(ஸல்) அவர்கள் களங்கமற்றதும் தூய்மையானதுமான இதயத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விவரித்திருக்கின்றார்.

ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**"மனித உடம்பில் ஒரு மாமிசத்துண்டு உள்ளன. அது ஆரோக்கியமுடையதாகயிருந்தால் மனிதனின் உடல் முழுவதும் ஆரோக்கியமுடையதாகயிருக்கும். அது ஆரோக்கியத்தை இழந்ததாகயிருந்தால் மனிதனின் உடல் முழுவதும் ஆரோக்கியத்தை இழந்ததாகயிருக்கும். அறிந்துக் கொள்ளுங்கள் அதுவே தான் இதயம்" (புகாரி)**

அனைத்து வகைப்பட்ட நம் எண்ணங்களுடையவும் உணர்ச்சிகளுடையவும் ஊற்று, மனித இதயம் என்று இந்த விளக்கத்திலிருந்து நமக்கு உணர்ந்து கொள்ளலாம். **ஒருவரின் இதயம் நற்சிந்தனைகளை கொண்டு குவிந்திருந்தால் அவரின் பாதை யாவும் நற்செயல்களைக் கொண்டு நிறைந்துக் கொள்ளும். அதை போன்றே ஒருவரின் இதயம் தீய சிந்தனைகளைக் கொண்டு குவிந்திருந்தால் அவரின் பாதை முழுவதும் தீமையும் கவலையும் கொண்டதாகயிருக்கும்.**

சிந்தனைகளும் கருத்தும் இதயத்திலிருந்தே பிறவி கொள்கின்றது. பூந்தோப்பில் ஒரு விதையைப் போன்று அது திடீரென வளர்ந்து விரிவாகிக் கொள்கின்றது. இதயத்தின் தூய்மை, நன்மையின் மரத்தை வளரச் செய்ய வழி வகுக்கின்றது. கூறிவரும் விஷயத்தின் முக்கிய அம்சம் என்பது, ஒருவரின் இதயம் நல்ல நிலையிலாக இருந்தால் அவரது கைகளும், காலுகளும், நாவும், மனதும் நல்ல நிலையில் செயல்பட்டுக் கொள்ளும்.

**அனைத்துப்புகழும் அல்லாஹ்விற்கு மட்டுமாகும். நான் அல்லாஹ்விடத்தில் பிரார்த்தனை செய்கின்றேன். நம் இதயங்களை சுத்தப்படுத்திக் கொள்வதற்கு நம் அனைவருக்கும் அவன் உதவி புரிவானாக! நம் இதயங்கள் யாவும் தூய்மையாக பரிணமிக்கட்டும். அந்நேரம் தீய சிந்தனைகளும் கருத்துகளும் அங்கு நுழைவதில்லை. இதயத்தின் தூய்மை மட்டும் அங்கு குடி கொள்ளும்.**

இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Issued by:**
Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**
Azim Ahmad
**E-mail:** azimahmad070@gmail.com
Cell: 9789180817